## தமிழர்களின் ஹாட்ரிக் சாதனை: சந்திரயான்-3 திட்ட இயக்குநர் விழுப்புரம் வீரமுத்துவேல்




**விழுப்புரம்**: இந்தியாவுக்கே பெருமை சேர்க்கும் சந்திரயான்-3 விண்கல பயணத்தின் திட்ட இயக்குநராக இருப்பவர் வீரமுத்துவேல். இவர் விழுப்புரத்தை சேர்ந்தவர். இவரது தந்தை பழனிவேல், ரயில்வே ஊழியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

1978-ல் பிறந்த வீரமுத்துவேல், விழுப்புரத்தில் உள்ள ரயில்வே பள்ளியில் பள்ளிப் படிப்பையும், பின்னர், அங்குள்ள தனியார் தொழில்நுட்பக் கல்லூரியில் டிப்ளமாவும் படித்தார்.

பின்னர், சென்னை சாய்ராம் பொறியியல் கல்லூரியில் பி.இ. பட்டப் படிப்பை முடித்தார். திருச்சி மண்டல பொறியியல் கல்லூரியில் (ஆர்இசி) எம்.இ. படிப்பை முடித்தார்.

கடந்த 2004-ல் இஸ்ரோவில் விஞ்ஞானியாக பணியில் சேர்ந்தார். சந்திரயான்-3 திட்டத்தின் இயக்குநராக கடந்த 2019 டிச.9-ம் தேதி நியமிக்கப்பட்டார்.

சந்திரயான்-2 திட்டப் பணியிலும் பணியாற்றிய வீரமுத்துவேல், அப்போது நாசாவுடன் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டார்.

சந்திரயான்-1 திட்ட இயக்குநராக பொள்ளாச்சி அடுத்த கோதவாடியை சேர்ந்த மயில்சாமி அண்ணாதுரை, சந்திரயான்-2 திட்ட இயக்குநராக

EVA STALIN IAS ACADEMY

சென்னையை சேர்ந்த முத்தையா வனிதா பணியாற்றிய நிலையில், சந்திரயான்-3 திட்ட இயக்குநராக தமிழகத்தை சேர்ந்த வீரமுத்துவேல் பணியாற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது.

செய்தியாளர்களிடம் வீரமுத்துவேல் கூறியபோது, ''சந்திரயான்-3 விண்கலத்தை புவிவட்டப்பாதையில் இருந்து விலக்கி நிலவில் தரையிறக்கும் வரை அனைத்து பணிகளும் சவால் நிறைந்தவை. எனவே, அதன் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும். நிலவில் தரையிறங்கும் ரோவர் சாதனத்தில் ஒரு சக்கரத்தில் நம் நாட்டின் அசோக சக்கர சின்னமும், மற்றொரு சக்கரத்தில் இஸ்ரோவின் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. நான் உட்பட தமிழகத்தை சேர்ந்த பலர் இந்த திட்டத்தில் பணியாற்றி உள்ளோம். ஒரு தமிழனாக மட்டுமின்றி, இந்தியனாக இதில் எனது பங்களிப்பு உள்ளதை நினைத்து பெருமைப்படுகிறேன்'' என்றார்.

**சந்திரயான்-3 விண்கலம்: ஒரு பார்வை**



சந்திரயான்-3 விண்கலம் மொத்தம் 3,895 கிலோ எடை கொண்டது. இதில் லேண்டர், ரோவர், உந்துவிசை இயந்திரம் (Propulsion Module) ஆகிய 3 கலன்கள் உள்ளன.

இதில், உந்துவிசை கலனின் எடை 2,145 கிலோ. லேண்டர், ரோவர் ஆகிய கலன்களை நிலவின் சுற்றுப்பாதைக்கு கொண்டு செல்வது இதன் முக்கியப் பணி. இதில் இருந்து லேண்டர் பிரிக்கப்பட்ட பின்னர் 3 முதல் 6 மாதங்கள் நிலவை சுற்றி வந்து ஆய்வு செய்யும். அதற்காக, அந்த கலனில் ஷேப் எனும்

ஆய்வு கருவி பொருத்தப்பட்டுள்ளது. அந்த சாதனம் மூலம் நிலவின் சுற்றுப்பாதையில் வலம் வந்தவாறு புவி நோக்கி நிறமாலைக் கதிர்களை அனுப்பும். அந்த கதிர்களின் பிரதிபலிப்பை கொண்டு, அங்கு கார்பன், ஆக்சிஜன் உள்ளதா என்பதைக் கண்டறிந்து அங்கு உயிரினங்கள் வாழ முடியுமா என்பதை அறியலாம்.

நிலவில் தரையிறங்கும் கலனான லேண்டர் 1,750 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட்காலம் 14 நாட்கள். இதில் 3 விதமான ஆய்வு கருவிகள் உள்ளன. நிலவின் மேற்பரப்பு வெப்பம், நிலஅதிர்வுகள், அயனிக் கூறுகள் உள்ளதா என்பதை அந்த கருவிகள் பரிசோதிக்கும். நாசாவின் எல்ஆர்ஏ(லேசர் ரெட்ரோரிப்ளக்டர் அரே) எனும் மற்றொரு கருவி பிரதிபலிப்பான் தொழில்நுட்பத்தை கொண்டது. அது லேசர் கற்றைகளை பிரதிபலித்து, பூமிக்கும், நிலவுக்குமான தொலைவுகளை ஆய்வு செய்யும்.

நிலவில் லேண்டர் தரையிறங்கிய சில மணி நேரத்துக்கு பிறகு, அதில் இருந்து ரோவர் வாகனம் வெளியே வரும். தனது 6 சக்கரங்களின் உதவியுடன் நிலவில் குறிப்பிட்ட தூரம் வரை ஊர்ந்து சென்று ஆய்வில் ஈடுபடும். அதில் 2 ஆய்வு கருவிகள் உள்ளன. ஏபிக்ஸ்எக்ஸ் எனும் கருவி நிலவின் தரைப்பரப்பில் லேசர் கற்றைகளை வெளிப்படுத்தி மணல் தன்மையை ஆய்வு செய்யும். எல்ஐபிஎஸ் எனும் மற்றொரு கருவி ஆல்பா கதிர்கள் மூலம் தரை, பாறைப் பகுதிகளில் 10 செ.மீ. வரை துளையிட்டு கனிமங்களை கண்டறியும்.

**உச்ச நீதிமன்றத்தில் புதிதாக 2 நீதிபதிகள் பதவியேற்பு: மொத்த எண்ணிக்கை 32 ஆக அதிகரிப்பு**



உஜ்ஜல் புயான், வெங்கட்டநாராயண பட்டி

**புதுடெல்லி:** உச்ச நீதிமன்றத்தில் புதிதாக 2 நீதிபதிகள் பதவியேற்றுக் கொண்டனர். அவர்களையும் சேர்த்து நீதிபதிகளின் எண்ணிக்கை 32 ஆக அதிகரித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 34 ஆக உள்ளது. ஆனால், 30 நீதிபதிகள் மட்டுமே பணியில் இருந்தனர். 4 இடங்கள் காலியாக இருந்தன. இந்நிலையில், தெலங்கானா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி உஜ்ஜல் புயான் மற்றும் கேரள உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி வெங்கட்ட நாராயண பட்டி ஆகியோரின் பெயர்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டன.

கடந்த 5-ம் தேதி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான கொலீஜியம் அதற்கான பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பியது. அதை ஏற்று இருவரையும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்படுவதாக மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மெக்வால் கடந்த புதன்கிழமை அறிவித்தார். இதையடுத்து,உஜ்ஜல் புயான் மற்றும் வெங்கட்டநாராயண பட்டி ஆகிய இருவரும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நேற்று பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு தலைமை நீதிபதி சந்திரசூட் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தற்போது உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 32 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 1964 ஆகஸ்ட் 2-ம் தேதி பிறந்தவர் நீதிபதி உஜ்ஜல் புயான். கடந்த 2011-ம் ஆண்டு குவாஹாட்டி உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கடந்த 2022 ஜூன் 28-ம் தேதி முதல் தெலங்கானா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்த புயான், தற்போது உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1962-ம் ஆண்டு மே 6-ம் தேதி பிறந்தவர் நீதிபதி வெங்கட்ட நாராயண பட்டி. ஆந்திர உயர் நீதிமன்ற நீதிபதியாக கடந்த 2013-ம் ஆண்டு ஏப்ரல் 12-ம் தேதி நியமிக்கப்பட்டார். அதன்பின் கடந்த 2019-ம் ஆண்டு கேரள உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டார். அங்கு கடந்த 2023 ஜூன் 1-ம் தேதி முதல் தலைமை நீதிபதியாக பணியாற்றினார்.

ஆந்திர மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த கடந்த 2022-ம் ஆண்டு முதல் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் யாரும் இல்லை. அதை சரி செய்யும் வகையில் பட்டியை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கலாம் என்று கொலீஜியம் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி தற்போது

உச்ச நீதிமன்ற நீதிபதியாக பட்டி நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நிலவுக்குச் செல்லும் சந்திரயான்-3 விண்கலம்: மிஷனில் பணியாற்றிய 54 பெண்கள்!**




ரித்து கரிதால் | இஸ்ரோ மூத்த விஞ்ஞானி

**ஸ்ரீஹரிகோட்டா**: சந்திரயான்-3 திட்டத்தில் 54 பெண்கள் பணியாற்றியதாக இஸ்ரோ மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார். ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் இன்று (ஜூலை 14) மதியம் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இந்நிலையில், இந்தத் திட்டத்தில் பணியாற்றியவர்கள் 54 பேர் பெண்கள் என்பது இப்போது தெரியவந்துள்ளது. இவர்கள் பொறியாளார்கள், விஞ்ஞானிகள் பதவியில் இருப்பவர்களாவர். மேலும் சந்திராயன் 3 திட்டத்தில் இணை இயக்குநர்கள், திட்ட மேலாளர்களாக பணி புரிந்துள்ளனர்.

**திட்டத்தின் பின்னணியில்...** - சந்திரயான் 3 திட்டத்தின் இயக்குநர் மோகன் குமார். ராக்கெட் இயக்குநர் பிஜு சி தாமஸ். விண்கல இயக்குநர் டாக்டர் பி.வீரமுத்துவேல். இவர்களுடன் சேர்த்து 54 பெண்கள் இந்தத் திட்டத்தில் முக்கியப் பணியாற்றியுள்ளனர். இவர்களில் ஸ்ரீஹரிகோட்ட ராக்கெட்

தளத்தில் வர்ணனையாளராக இருக்கும் பி.மாதுரி தான் வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்த பெண்ணாக இருக்கிறார். மற்றவர்கள் திட்டத்தின் பின்னணியில் செயல்பட்டவர்கள் ஆவர்.

**முன்பு மங்கள்யான் இப்போது சந்திரயான்...** - ரித்து கரிதால் ஸ்ரீவஸ்தவா சந்திரயான் - 3 திட்டத்தின் முக்கிய முகமாக இருக்கிறார். இவர் இஸ்ரோவின் மூத்த விஞ்ஞானிகளில் ஒருவர். இவர் செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட மங்கள்யான் விண்வெளித் திட்டத்திலும் முக்கியப் பங்காற்றியவராவார். ரிது கரிதால் லக்னோ பல்கலைக்கழகத்தில் 1996-ஆம் ஆண்டு இயற்பியல் பயின்றார். அதன் பின்னர் பெங்களூரு இந்திய அறிவியல் மையத்தில் எம்.டெக் பயின்றார். 1997-ல் இஸ்ரோவில் இணைந்த இவர் பல்வேறு திட்டங்களிலும் தனது பங்களிப்பை செலுத்தியுள்ளார். 20-க்கும் மேற்பட்ட சர்வதேச இதழ்களில் இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன

**இஸ்ரோவின் நிலவு ஆராய்ச்சியும் சந்திரயான் விண்கலமும்: ஆகஸ்ட் 2003 முதல் இப்போது வரை**



**புதுடெல்லி:** நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சந்திரயான் என்ற திட்டத்தை முன்னெடுத்தது. இந்த ஆராய்ச்சி இதுவரை கண்டுள்ள வளர்ச்சி பற்றிய டைம்லைன் இதோ:

**ஆகஸ்ட் 15, 2003:** இந்தியாவின் அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், சந்திரயான் திட்டத்தை முதன்முதலாக அறிவித்தார்.
**அக்டோபர் 22, 2008:** சந்திரயான்-1 திட்டம் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.
**நவம்பர் 8, 2008:** சந்திரயான் -1 விண்கலம் வெற்றிகரமான நிலவின்

சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.
**நவம்பர் 14,2008:** சந்திரயான்-1 விண்கலத்தில் இருந்து பிரிந்த ஆய்வுக்கலன் நிலவின் தென் முனையில் மோதியது. இதன் மூலம் நிலவின் மேற்பரப்பில் தண்ணீர் கூறுகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.
**ஆகஸ்ட் 28, 2009:** சந்திரயான் -1 திட்டம் நிறைவுபெற்றதாக இஸ்ரோ அறிவித்தது.
**ஜூலை 22, 2019:** சந்திரயான்-2 விண்கலம் நிலவுக்கு செலுத்தப்பட்டது.
**ஆகஸ்ட் 20, 2019:** சந்திரயான் -2 விண்கலம் நிலவின் சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.
**செப்டம்பர் 2, 2019:** நிலவின் சுற்றுவட்டப்பாதையில் 100 கிமீ உயரே விக்ரம் லேண்டர் விடுவிக்கப்பட்டது. ஆனால் லேண்டர் நிலவில் இருந்து 2.1 கிமீ தொலைவில் இருந்து பூமியில் ஒரு கட்டுப்பாட்டு மையத்துக்கான தொடர்பு துண்டிக்கப்பட்டது.
**ஜூலை 14, 2021:** சந்திரயான்-3 விண்கலம் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து ஏவப்படுவதற்குத் தயராக உள்ளது.
**ஆகஸ்ட் 23/24, 2023:** அன்றைய தினம் தான் நிலவின் மேல்பரப்பில் சந்திரயான் -3 விண்கலம் நிலை கொள்ளும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். சந்திரயான்-3 விண்கலம் 3,895 கிலோ எடை கொண்டது. ஏற்கெனவே ஆர்பிட்டர், நிலவை சுற்றி வருவதால், இந்த முறை லேண்டர், ரோவர் கலன்கள் மட்டும் அனுப்பப்படுகின்றன. இவை 14 நாட்கள் நிலவில் ஆய்வு மேற்கொள்ளும். இந்த திட்டம் வெற்றியடைந்தால், அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளை அடுத்து, நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 4-வது நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY

**ஆசிய தடகள சாம்பியன்ஷிப் | ஒரே நாளில் இந்தியாவுக்கு 3 தங்கப் பதக்கம்**




ஜோதி யார்ராஜி

**பாங்காக்:** 25-வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 2-வது நாளான நேற்று மகளிருக்கான 100 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் இந்தியாவின் ஜோதி யார்ராஜி தங்கப் பதக்கம் வென்றார். பந்தய தூரத்தை அவர், 13.09 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். ஜப்பானின் டெராடா அசுகா (13.13 விநாடிகள்), அயோகி மசுமி (13.26 விநாடிகள்) ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கம் கைப்பற்றினர்.

ஆடவருக்கான 1500 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் அஜய் குமார் சரோஜ் பந்தய தூரத்தை 3:41.51 விநாடிகளில் கடந்து தங்கம் வென்றார். ஆசிய தடகள போட்டியில் அஜய்குமார் சரோஜ் பதக்கம் வெல்வது இது 3-வது முறையாகும். 2017-ம் ஆண்டு தங்கப் பதக்கமும், 2019-ல் வெள்ளிப் பதக்கமும் அவர், வென்றிருந்தார்.

ஆடவருக்கான டிரிப்பிள் ஜம்ப்பில் இந்தியாவின் அப்துல்லா அபுபக்கர் 16.93 மீட்டர் நீளம் தாண்டி தங்கப் பதக்கம் வென்றார். ஜப்பானின் ஹிகாரு

இகேஹடா (16.73) வெள்ளிப் பதக்கமும், தென் கொரியாவின் கிம் ஜாங்வூ (16.59) வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

மகளிருக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் ஐஸ்வர்யா கைலாஷ் மிஸ்ரா பந்தய தூரத்தை 53.07 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் பெற்றார். இலங்கையின் ராமநாயகே நதீஷா (52.61) தங்கப் பதக்கமும், உஸ்பெகிஸ்தானின் ஃபரிதா சோலீவா (52.95) வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

**பிரான்ஸின் உயரிய விருது பெற்றது இந்தியாவுக்கு கவுரவம்: பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்**



பிரான்ஸின் எலிசி அரண்மனையில் பிரதமர் மோடிக்கு 'கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் ' விருதை அளித்த பின் அவரை அழைத்து வருகிறார் அதிபர் இம்மானுவேல் மேக்ரான்.

**புதுடெல்லி:** பிரான்ஸ் நாட்டின் மிக உயர்ந்த 'தி கிரான்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர்' விருது அளிக்கப்பட்டதை பணிவுடன் ஏற்கிறேன். இது இந்தியாவுக்கும், 140 கோடி இந்திய மக்களுக்கும் அளிக்கப்பட்ட கவுரவம்' என பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் தேசிய தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அழைப்பு விடுத்தார். இதை ஏற்று நேற்று முன்தினம் பிரான்ஸ் சென்ற பிரதமர்

மோடியை விமான நிலையத்தில் அந்நாட்டு பிரதமர் எலிசபெத் போர்ன் வரவேற்றார்.

அதன்பின் தலைநகர் பாரீஸில் இந்தியர்களை சந்தித்து பிரதமர் மோடி பேசினார். பல துறைகளில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சியை எடுத்து கூறிய மோடி, இந்தியாவில் முதலீடு செய்ய பிரான்ஸில் உள்ள இந்தியர்கள் முன்வர வேண்டும் என அழைப்புவிடுத்தார்.

அதன்பின் பிரான்ஸ் பிரதமர் எலிசபெத் போர்னுடன் பொருளாதாரம், வர்த்தகம், எரிசக்தி, சுற்றுச்சூழல், போக்குவரத்து, கல்வி, டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் மக்கள் தொடர்பு போன்ற துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயல்படுவது குறித்து பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார். பிரான்ஸ் செனட் தலைவர் ஜெரார்ட் லார்ச்சரையும் பிரதமர் மோடி சந்தித்து பேசினார்.

**இரவு விருந்து:** பிரதமர் மோடிக்கு அதிபரின் எலிசி அரண்மனையில் நேற்று முன்தினம் இரவு விருந்து அளிக்கப்பட்டது. அவரை அதிபர் இம்மானுவேல் மேக்ரானும் அவரது மனைவியும் வரவேற்றனர். இந்த விருந்து நிகழ்ச்சியில், பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருதான 'கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர்' விருதை பிரதமர் மோடிக்கு அதிபர் இம்மானுவேல் மேக்ரான் வழங்கினார். இந்த விருதை பெறும்முதல் இந்திய பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விருது வழங்கப்பட்டது குறித்து ட்விட்டரில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது: 'கிராண்ட் கிராஸ் ஆஃப் திலீஜியன் ஆஃப் ஹானர்' விருதை மிகவும் பணிவுடன் ஏற்றுக் கொள்கிறேன். இது இந்திய மக்கள் 140 கோடி பேருக்கு அளிக்கப்பட்ட கவுரவம். இதற்காக அதிபர் இம்மானுவேல் மேக்ரானுக்கும், பிரான்ஸ் அரசுக்கும் மற்றும் மக்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இது, இந்தியா மீது பிரான்ஸ் வைத்துள்ள ஆழமான அன்பையும், நமது நாட்டுடனான நட்புறவை மேலும் வலுப்படுத்த பிரான்ஸ் உறுதியாக உள்ளதையும் தெரிவிக்கிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**இந்தியில் வரவேற்பு:** இந்தியா, பிரான்ஸ் இடையே தூதரக அளவில் நட்புறவு ஏற்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்நிலையில் அந்நாட்டு தேசிய தினத்தில் பங்கேற்க பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றுள்ளார். இது குறித்து ட்விட்டரில்

இந்தியில் தகவல் தெரிவித்துள்ள பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், ‘‘இந்தியாவும், பிரான்ஸும் 25 ஆண்டு கால நட்புறவையும், நம்பிக்கையையும் கொண்டாடுகின்றன. இது வலுவடைந்து கொண்டு வருகிறது. பாரீஸ் நகருக்கு நரேந்திர மோடியை வரவேற்கிறேன்’’ என குறிப்பிட்டிருந்தார்.

**3 ரஃபேல் போர் விமானம்:** பிரான்ஸ் நாட்டின் தேசிய தினத்தை முன்னிட்டு 6,300 வீரர்கள் பங்கேற்கும் பிரம்மாண்ட ராணுவ அணிவகுப்பும் நடைபெறுகிறது. இதில் இந்தியாவின் முப்படை வீரர்களும் பங்கேற்று அணிவகுத்து சென்றனர். இந்திய ராணுவத்தின் சார்பில் பஞ்சாப் படைப்பிரிவு அணி வகுப்பில் பங்கேற்றது. முதல் உலக போரின் போது கடந்த 1915-ம் ஆண்டு செப்டம்பர் பிரான்ஸில் நியூவே சப்பேலி என்ற இடத்தில் நடந்த போரில் பஞ்சாப் படைப்பிரிவு பங்கேற்றது. இதை நினைவு கூரும் வகையில், பிரான்ஸ் நாட்டின் தேசிய தின அணிவகுப்பில் பஞ்சாப் படைப்பிரிவு பங்கேற்றது. இந்திய விமானப்படையின் 3 ரஃபேல் போர் விமானங்களும், பிரான்ஸ் விமானப்படையுடன் இணைந்து சாகசத்தில் ஈடுபட்டன.

**விரைவில் இந்தியன் யுபிஐ:** பிரான்ஸில் இந்திய மக்களிடம் நேற்று முன்தினம் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ‘‘பிரான்ஸில் இந்தியாவின் யுபிஐயை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது. இது ஈஃபிள் கோபுரத்தில் இருந்து தொடங்கப்படும். விரைவில் இந்திய சுற்றுலா பயணிகள் யுபிஐ மூலம் ரூபாயில் பணம் செலுத்த முடியும்’’ என்றார்.

யுபிஐ மற்றும் சிங்கப்பூரின் பேநவ் ஆகியவை இதுபோன்ற ஒப்பந்தத்தை ஏற்கனவே செய்துள்ளன. இதன் மூலம் இரு நாட்டு மக்கள் யுபிஐ மூலம் இரு நாடுகளிலும் பணம் செலுத்திக் கொள்ளலாம். ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பூட்டான் மற்றும் நேபாளம் ஆகியவை யுபிஐ மூலம் பணம் செலுத்தும் முறையை ஏற்கெனவே பின்பற்றுகின்றன.

யுபிஐ சேவைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், மேற்கத்திய நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளில் விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தையில் என்பிசிஐ (நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா) இன்டர்நேஷனல் ஈடுபட்டுள்ளது

## Moon landings | 1958 முதல் நிலவு ஆராய்ச்சிக்காக உலக நாடுகள் மேற்கொண்ட 70 மிஷன்கள்




சந்திரயான்-3 திட்டம் வெற்றியடைந்தால், அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு பிறகு, நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 4-வது நாடு என்ற பெருமை இந்தியாவுக்குக் கிடைக்கும் என்பதால் உலகமே இந்த நிகழ்வை எதிர்நோக்கியுள்ளது.

இந்நிலையில் சற்றே திரும்பிப் பார்த்தால் 1958 முதல் இதுவரை நிலவுக்கு முழுமையான வெற்றி அல்லது பகுதி வெற்றி கண்ட என மொத்தம் 70 மிஷன்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 41 மிஷன்கள் தோல்வியில் முடிந்தன என்று நாசா (அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம்) புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

1950, 1960 மற்றும் 1970களில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா (அப்போது சோவியத் குடியரசு) மட்டுமே நிலவுக்கு விண்கலங்களை அனுப்பியிருந்தன. 90 மிஷன்களில் 40 வெற்றி கண்டன. 1980களில் நிலவு சார்ந்து எந்தவித விண்வெளி ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. 1990ல் ஜப்பான் நிலவு ஆராய்ச்சியில் இணைந்தது. ஹிட்டன் ஆர்பிட்டர் என்பது அதன் பெயர். ஹிட்டன் ஜப்பானின் பூமியைச் சுற்றும் செயற்கைக்கோள் ஆகும். எதிர்காலத்தில் சந்திரன் மற்றும் கிரகப் பணிகளுக்கான

தொழில்நுட்பங்களைச் சோதித்து சரிபார்க்க வடிவமைக்கப்பட்டதாகும். ஹிட்டன் விண்கலத்தில் ஹகோரோமோ என்ற சிறிய செயற்கைக்கோள் இருந்தது. அது நிலவுக்கு அருகே நிலைநிறுத்தப்பட்டது. 2000ல் சீனா, இந்தியா மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை இணைந்து நிலவுக்கான முதல் ஆர்பிட்டல் மிஷன்களை வெற்றிகரமாக மேற்கொண்டன.

இன்று இந்தியாவின் சந்திரயான்-3 திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. முன்னதாக, நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சந்திரயான்-2 விண்கலத்தை கடந்த 2019 ஜூலை 22-ம் தேதி விண்ணில் செலுத்தியது. பல்வேறுகட்ட பயணங்களுக்கு பிறகு, சந்திரயான்-2 விண்கலம் 2019 செப்டம்பரில் நிலவின் சுற்றுப்பாதையை அடைந்தது. எனினும், தொழில்நுட்பக் கோளாறால் லேண்டர் கலன் தரையிறங்காமல், நிலவில் மோதி செயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆர்பிட்டர், நிலவின் சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இதையடுத்து, சந்திரயான்-3 விண்கலத்தை ரூ.615 கோடியில் இஸ்ரோ வடிவமைத்தது. இந்த விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் 2-வது ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்-3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3) ராக்கெட் மூலம் இன்று மதியம் 2.35 மணிக்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

**வட கொரியாவின் புதிய ஏவுகணை சோதனை வெற்றி: கிம் மகிழ்ச்சி**



**பியாங்யாங்:** வட கொரியா 'ஹ்வாசோங்-18' என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (ICBM) சோதனையை வெற்றிகரமாக பரிசோதித்தது குறித்து அந்நாட்டு அதிபர் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

'ஹ்வாசோங்-18 சோதனை வெற்றிக்கரமாக முடிந்ததைக் கண்ட அதிபர் கிம் வெள்ளை உடையில் மகிழ்ச்சியாக கைதட்டினார். ஹ்வாசோங்-18 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை வெற்றி, கிம்மை மிகுந்த மகிழ்ச்சியடைய செய்துள்ளது. இந்தப் புதிய ஏவுகணை ஆகாயத்தில் 74 நிமிடங்கள் பயணித்து இலக்கை அடைந்தது. ஆகாயத்தில் நீண்ட நேரம் பயணிக்கும் வடகொரியாவின் ஏவுகணையாக இது கருதப்படுகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, கடந்த ஏப்ரல் மாதம் வட கொரியா சோதனை செய்த ஏவுகணை 6,648 கிமீ உயரத்தில் 1,001 கிலோமீட்டர்கள் பயணித்து ஜப்பானின் கிழக்கு பகுதியில் விழுந்தது. இது, உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலையில், மீண்டும் ஏவுகணை தாக்குதல் பரிசோதனையில் கடந்த சில மாதங்களாக வடகொரியா ஈடுபட்டு வருகிறது

அமெரிக்கா - தென் கொரிய படைகள் கொரிய தீபகற்பத்தில் கடந்த சில மாதங்களாகவே ராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், இரு நாடுகளும் மிகப் பெரிய ராணுவ பயிற்சிக்கு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில்தான், வடகொரியா தொடர்ந்து எவுகணை சோதனைகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY

**சௌந்தர்யா: இந்தியாவின் 2-வது ஏஐ செய்தி வாசிப்பாளர்**



ஏஐ செய்தி வாசிப்பாளர் சௌந்தர்யா

**பெங்களூரு:** உலக மக்களை ஆட்டிப் படைக்க தொடங்கியுள்ளது ஏஐ (செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்). இப்போது இந்தியாவின் இரண்டாவது செய்தி வாசிப்பாளர் ஒரு செய்தி நிறுவனத்துக்காக தனது பணியை தொடங்கி உள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒடிசாவின் செய்தி நிறுவனம் ‘லிசா’ எனும் ஏஐ செய்தி வாசிப்பாளரை அறிமுகம் செய்திருந்தது. இந்த சூழலில் கன்னட மொழியில் மாத்தாடும் (பேசும்) ‘சௌந்தர்யா’ எனும் ஏஐ செய்தி வாசிப்பாளரை கடந்த செவ்வாய்க்கிழமை அன்று அறிமுகம் செய்துள்ளது கன்னட தொலைக்காட்சியான ‘பவர் டிவி’.

“அனைவருக்கும் வணக்கம். ஏஐ தொழில்நுட்பம் தனது தடத்தை அனைத்து துறைகளிலும் பதித்து வருகிறது. செய்தி நிறுவனங்களும் இதில் அடங்கும். என்னைப் போலவே வட இந்தியாவில் ஏஐ செய்திகளை வழங்கி வருகிறது. நான் சௌந்தர்யா. இந்தியாவின் இரண்டாவது ஏஐ செய்தி வாசிப்பாளர்” என தன்னை குறித்த அறிமுகத்தை கொடுத்துள்ளது. வெறும் செய்தி வாசிப்பாளராக மட்டுமல்லாது பவர் டிவியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் சௌந்தர்யாவை இயங்க செய்யும் முயற்சி நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY